அநுபவ வைத்யம்

ஏடு எண் : 325

பெயர் : அநுபவ வைத்யம்

பாடல் : உரைநடை

ஏடு எண்ணிக்கை : 82

அளவு : 21.7 x 3.2

வரி : 8

நிலை : முழுமை

குறிப்பு :

2அ கருப்பு ரெத்த மடங்க புகை

சாம்பிராணி, ஏலம் சமன் வாங்கி பொடித்து நெருப்பில் கொஞ்சம் கொஞ்சம் போட்டு புகை பிடிக்க கருப்பு ரெத்த மூல முளை உருப்பு உள்ளுக்குப் போகும்.

ஆ கருப்பு ரெத்தத்துக்கு உதிப்புக்கு ஒத்தடம்

மாதுளை, ஆவரை நுனி கொழுந்து நீர் மூலாயிலை, ஆரையிலை. யாருள்ளாய்ப் பருப்பு பொடித்து கரண்டியிலிட்டு வைத்துப் ஆவின் வெண்ணை நெல்லிக் காயளவு சேர்த்து வதக்கி பொறுத்துணியிலிட்டு ஒத்தடமிட மூலம் போகும். இப்படி அஞ்சு (ஐந்து) நாள் ஒத்தடமிட மூலம் போகும்.

3.அ கால், கை மரப்பு வலிக்கு பூச மருந்து.

கடுக்காய், களிப்பாக்கு, சன்னாம்பு வெல்லம், காயபலம், காசுக்கட்டி, குக்கில் இவை யெசும் எருமைபாலிலிட்டு அரைத்து பூசவும்.

ஆ ராக்கழுக்கு மருந்து.

நெல்லி நெற்பொரி சர்க்கரை திப்பிலி / கொல்லிமான் கொம்பு கூட்டி யரைப்பது // அல்லிமார் முலைப்பாலிலுரைத்திட / வெல்ல ஒருகும் ராக்கழுஞ் சாந்தியே / நெல்லி நெல்பொரி சக்கரை திப்பிலி / கொல்லி மாமலை தன்னைக் குழைக்க / வல்லி ராக்கழுஞ் சாந்தியமாத் தீரும் / நெல்லையல்லை சுகந்திடு காலமே.

4அ மூலகணத்துக்கு மருந்து

சீரகம், வெங்காயம், மாசிக்காய்
கிராம்பு, சாதிக்காய், தயிரில் அரைத்து வெள்ளாட்டின்
சுட்டு அரைத்து தயிரில் ஆறுவேளை, எட்டுவேளை
கொடுப்பது. பச்சை பத்தியம். தயிரும் சோறும் சாப்பிடவும்

ஆ சுவாச காச பெருமலுக்கு

ஆ

வெள்ளைப்பூ பலம் 1....
தண்டு சுக்குலமதுண்டு நருக்கி பரங்கி சக்கை பலம்
......1.... ஆக இரண்டும் கூள் பொடித்து
பானை அடியில் போட்டு தண்ணீர் விட்டு ஒரு
வேறகாள் பெரியிட்டு பெட்டில் ஒன்றாய் காய்ச்சி
கஷாயத்தில் .. திக்க அளவு. சர்க்கரை போட்டு
காலை மாலை.. சாப்பிடவும். பச்சை பத்தியம்.

கருஆரள் சிந்தாத ஆதவெண்ணை சகல
5.அ ரோகத்துக்கும் கொற்ப உண்டாக சகலரணத்துக்கு
ஆவரத்தாதின் எண்ணெய் படி!

வேலிப்பருத்திசாறுபடி 1 தேங்காய்ப்பால் படி 1 வெள்ளை
ஆண்டு பலம் 1.., கடுக்காய்தோல் பலம் 1..; சித்தி
நேர்வாளம் பலம் 1, கருஞ்சீரகம் - 1........
உதைதிர் வெள்ளை வெங்காரம், திப்பிலி, கலந்தூள்
அதைக்கிரமாக்கினை 3 சரக்கையெல்லாம் பொடித்து அரைத்து
கலக்கி பதத்தில் வடித்து காலமே ஒரு கரண்டி ...
கரண்டி வீதம் 3 நாள் சென்றால் நாள் 7. நாள் இல
பாலும் சோறும் வாயாதி பலம் சொண்டு பத்தியமாய்
சாப்பிட்டு வர தீரும் வாயாதி. குன்மம், பெருவயிறு
பாண்டு நாளை அண்டி கைநீர் இளை உதைவாயு
மாந்தம் கிள்ளம் 4060 வாயாதியும் அடைப்பானத்தில்
தீரும்.

4

6. அ சுரம் - 64க்கு கசாயம்

கடுகுரோகணி, திப்பிலி, கூத்தன்குதம்பை கோஷ்டம், கொத்தமல்லி, பேய்ப்புடல், நிலவேம்பு கொடிவேலி, செவ்வியம், சிறுதேக்கு, அரத்தை கண்டங்கத்திரி

ஆ. - ஆடாதோடை தூதுவளை வேர், சித்தாமுட்டி வேர், ஆடுதீண்டாப்பாளை வேர், பேராமல்லி வேர், நெல்லிக்காய் தான்றிக்காய், ஊற்றுக்கரந்தை, கற்பூரவல்லி, துளசி, தூதுவேளை முக்குள் வேளை - [illegible] அளவால் . [illegible] - [illegible] [illegible] - [illegible] . [illegible] - [illegible] . [illegible] . [illegible] .. [illegible] . அரைத்து . . [illegible] [illegible]

7. அ அசுவகெந்தி சூரணம்

சீரகம், நாகப்பூ, ஏலம், லவங்க பட்டை, லவங்க பத்திரி, கொத்தமல்லி மிளகு வகைக்கு . பலம் - 1 . [illegible] . [illegible] . [illegible] - . அந்த [illegible] . . அமுக்கரா . கிழங்கு பலம் 1 சர்க்கரை . திரிகடுகு அளவில் . . . . சூரக் கெல்லாம் பொடித்து வஸ்திரகாயஞ் செய்து சர்க்கரை சேர கூட்டி அந்தி சந்தி ~~வெரு~~ வெருகு கடி பிரமாணம் சாப்பிடவும் காய்ச்சல் பாண்டு தள்ளவும். பத்தியம்.

ஆ சோகை மாத்திரை.

சேராங்கொட்டையைப் பிளந்து உள் பருப்பை எடுத்து அதற்க்குள் சிற்றாமணக்கு கொஞ்சம் வைத்து சீலைமண் செய்து மணல் புடம் போடவும் . சேராங் கொட்டை தள்ளி சர்க்கரை எடுத்து பனைவெல்லம் சாயாடை கூட்டி நொச்சிச்சாறு விட்டு அரைத்து கொத்தமல்லி பிரமாணம் உருண்டை செய்து

5

வைத்துக் கொள்ளவும். எட்டு வகை சூலை குன்மம் எட்டு
வாந்தி பேதியும் தீரும். கை கண்டது. பச்சா பத்தியம்

8.அ கனகனாதி பல்ப்பம் சகல வாசத்துக்கும்

8.அ

சுத்தம் தோலாம் 4, வெள்ளை
பாஷாணம் 4, நாபி 4, சுக்கு 2, திப்பிலி 2, வெங்காரம் 2
கெந்தி 2, மனோசிலை 2, அக்கராகாரம் 2 மிளகு 1
இவை சரக்குகளை சுத்தி செய்து கல்வத்திலிட்டு
பொடித்து கொஞ்சங் கொஞ்சந் தண்ணீர் தெளித்து
பொடித்து நல்லா தூள் செய்து வைத்து கொண்டு
ஆசன்னாக்கு யஞ்சாச் சாத்திலிடவும், வாய்வு 40க்கும்
சுக்குக்கு கசாயத்திலும், 40 யருமலுக்கு தேனிலிடவும்,
பித்தம் 40க்கும் சீரகத் தூளிலிடவும், அய்யத்துக்கு
யஞ்சாசார சத்திலிடவும், சுக்கு கசாயத்திலும் அறுப்
பாணம் தீரும். தாககுக்கு தேனால் வாதம் 80, சூலைக்-
-கட்டுந் தீரும். தேன் சீனி நெய்யால் மந்தார காசம்
தீரும். மகோதிரமுந் தீரும். சாரம் 64 ~~க்கும்~~ ... . .
ஊற்றை சிரைந்து ஆடாதோடை கசாயம் செய்து
திருக்கவும். குலபவுத்திரம் தீரும். ~~தேக்குக்கு~~ தேள். கொம்புக்கு வைத்தால்
9.அ சாத்தில் கலக்க மடவும், நசியம் செய்யவும் பாம்பு
கமரக்கு கலக்க மட்டு நசியம் செய்து யஞ்சா
சாத்தில் யடவும், உலாம்புக் கெல்லாம் நொச்சிச்
சாத்தில் கலக்க மட்டு நசியம் செய்யவும் சலி
~~இரைப்புக்கு~~ கிறுக்கு கொல்லன் கோவை கிழங்கு சாத்தில்
நசியமட்டு கலக்கச் செய்யவும். ஜன்னிய . . 8க்கு
நொச்சி சாத்தில் கலக்க மட்டு நசியம்
செய்யவும்.

6

ஆ சுரத்தின் மேல் வயறு நொந்தால் கஷாயம்

9·ஆ பேய்ப்புடலுக்கு அமுக்காரம்மை வெட்டிப்
போட்டு மூன்று அருப்பாய் செய்து சட்டியிலிட்டு வறுக்கவும்
மிளகு உரோசனை 3 தட்டிப்போட்டு வறுத்து இருபடி
தண்ணீர் விட்டு அரைக்கால் படியாக சுண்ட
வைத்து மூன்று வேளைக்கு குடுக்க தீரும்.

10·அ மேகம் - 21 - அந்தந்த வியாதிகள் பேர் அறியும்படி

10·அ வாய்வுமேகம், சுரமேகம், மதுமேகம்,
நீர்மேகம், நீராம்பு மேகம், பெண்மேகம், துன்
மாறுமேகம், குளிர்மேகம், சுருக்கு மேகம், வறள்மேகம்,
துளிர்மேகம், கல்லடைப்பு மேகம், இரத்த மேகம்
ஆசுவப்பார மேகம், காலைமேகம், மாலை மேகம், மாறாமை
மேகம், சதையடைப்பு மேகம், பச்சை மேகம், வெள்ளை
மேகம், மஞ்சள் மேகம் ஆக மேகம் 21 குணம்
அறியவும்.

<u>வாய்வுமேகத்தின் குணம்</u> அடி வயிர்
கனத்து நீரது வாராமல் கறுத்து இரண்டு நாழிகை
மட்டும் நீர் விழும். நீர் கீவகும் பரபரப்பாயும் போரை
சுருக்கும் தாகமில்லை. சுரமேகமாவது நீர்த்
11·அ துவாரம் படர்ந்து கொண்டு நீரானது வெண்மையைத்
துரைத்து வரும் இரண்டு நாழிகைக்கு ஒருக்கால்
ரெண்டுபடி போலே விழும் நீர் புளிச்சிறுக்கும் நீர்
உறைந்தால் வெள்ளை குங்கிலியம் பொடி செய்து
போட்டால்ப் போலே யிருக்கும் தாகமெடுக்கும்
தலைநோவுண்டாயிருக்கும் தேகம் ~~வெளு~~ வேட்க்காக
புண்டாயிருக்கும். ~~சுத்த மேகத்தின் குணம்~~

17

7

சுத்த மேகத்தின் குணம்

நீர் வெண்மையாக ஊறும். வெய்யிலாலே வைத்தால்
உப்பு பொரிந்து யிருக்கும் தாக முண்டாம் சரீரம்
மெலியும். சரீரமாதியந்தருகும். சொள்ள சிரவுண்டாகி
11 ஆ யிருக்கும், காச்சலுண்டாகும், கண் நில நிறவ்
கொண்டு கடைங்கு ஊறுந்திருக்கும். மதுமேகமாவது
நீர் தேன் நிறமாய் ஊறும் அது வாசமுண்டாயிருக்கும்
நீரானது புளிக்கும், சரீரந்தளர்ந்து கண்டயிட
மெல்லாம் வெதுக்கும். மாளையுண்டாகும் தாபம
ஊஞ்சை மிகை உண்டாகும். தாககுண்டு சாவுள்ளம்
மிகை உண்டாம். யப்பர அறிந்து கொள்ளவும்
நீர்மேகமாவது: இராக்காலத்தில் கதனமா நீர் ஊறும்
பகல் காலங்களில் கொஞ்சமா யிருக்கும். தாக
மில்லை. சரீரம் கொஞ்சமாக வாடும் உஷ்ண
முண்டாயிருக்கும். நீர் தெளிவாயிருக்கும்.
12 அ நீராப்பான் குணம்:- நீர் ஊறும் போது உள்ளே எறும்பு
கடித்தாற் போலே வெடுக்கு வெடுக்கென்று
சுருங்கும். வெண்ணரும் கையாலே ஆசைய
வேண்டியதாயிருக்கும். யானை நீர் சொப்பான் குணம்:—
நீர்ஊடை வேண்டியிருக்கும். எழுந்திருந்து போயிருந்தால்
அரை நாழிகை அடைத்துக் கொண்டு சுருத்து ஊறும்
அடிவயிறு, தண்டு, நீர்த்துவாரம் கொஞ்சமாக யிருக்கும்
தாதுபலம் கெட்டு போகும் சரீர பலன் வராது.
யானை தூன் மாங்கசை மலவது:.. அடிவயிறு புண்ணா
யிருக்கும் அதிலே கீழ்கட்டினால் நீர்த்துவாரத்
தோடே போம் போகா மலக்கட்டுப் பட்டால்
ஆ நீர் அடைக்கும். கல்லடைப்பான் குணம்:—
நாள் தறுதிலே வயத்திலே ஊறுந்து திரண்டு கெட்டு
பட்டு திணையரிசி போலாகி நாளாறு வருசம்

8

செல்லும் போது பாசைப்பயர் போலவும் பருத்தி
விதை போலவும் மப்பும ஆக நீர்த்துவாரத்திலே
நின்று அடைக்கும். ரெத்தமேகமாவது:- சலப்
பிரமேக உண்டாகயை பெண்களுடனே கூடினால்
அவள் போலே உண்டாகிய உஷ்ண மெல்லாம்
இவன் போலே பரப்பும். அதினாலே ரத்தமேகம்
உண்டாகி தண்ணனாலே ரத்த மாகும்.

13அ சலப்பிரமேகமாவது:- தன் சரீரத்திலே உஷ்ண
மிகுந்தாலும் காமசித்தினாலும் அரவயறு
புண்ணாய், நீர்த்துவாரம் புண்ணாகி சலமாக
ஊறும். காலமேகமாவது:- நித்திரை செய்து
சுகுந்திரைந்தால் வெகுநீர் யெருக்கும். மாலைமேகமாவது
அஸ்தமானமச நாழிகைக்குள் இரண்டு மூன்று
தரம் வெகுநீர் யெருக்கும். நித்திரையால் மட்டு
படும். ராத்திரி மேகமாவது:- ராகுப்பதும் வெகு
நீர் யெருக்கும் பகல் காலம் மாறும். வெண்
மேகம் குளிர்மேகமாகுமாதினால் கடினமாக யிருக்கும்
கோடை காலத்தில் மாறும். சுருக்கு மேகமாவது
ஆ எப்போதும் நீர்வரும் போதெல்லாம் புண்ணானந்
தாப்போலே எரியும். உஷ்ணமேகமாவது கோடை
காலத்தில் வெகுநீர் யெருக்கும். குளிர்மேகமாவது
குறைந்து குறைந்து நீர்வரும் மப்பும மேகத்தின்
குணமறியவும் வாய்வு மேகமாவது - கவலை கொள்ளும்
சுரமேகமாவது - சாஸ்திரன் கவலை கொள்ளும் சத்த
மேகமாவது (புண் தோன்றி) - - - கவலே கொள்ளும் வென்றி
பிரமேகமாவது (நால்போல் தோன்றி) கவலை கொள்ளும் தினமாஞ்சிக
கல்லுடைப்பு 90 நாழிகையால் கொள்ளும்

14அ ஊமைத்த15 மேகமும் நாள்கள் குறைந்து கொல்லா
தென்றாயவும். பின நீராதிவுரான் [?] குணம் மதுரமான
பல பண்டங்கள் தள்ளாதினாலும் பகல் காலம்
சஞ்சாரம் பண்ணாதனாலேயும் பால் நெய்
கூட்டாதினாலேயும் பிரமேகமெடுக்கும். இதுனாலே
யிருபது வகை மேகமும் வரும். வாதத்தினாலும்
பித்தத்தினாலும் அருஞ் சேத்துமத்தினால் பத்தும் யிப்படி
யிருவது பிரமேகமுண்டு வாதத்தினால் வந்தனாலு....
பேர் போசன சத்தி மென்றும் சுவனை பிறமாயமென்றும்
ஆ உத்தமநென்றும் [struck out] நாலு வகை யிதின் குணம்
நீரின் மேல் நெய் மிதக்கும். திரியால் நனைத்து
கொளுத்தினால் எரியும் அதன் வாசனை எப்படியென்றால்
ஒன்று கோமயமனாலும் ஒன்று யிறைச்சி கருவான
நீர் போலெ யிருக்கும் நெய் மிதக்கும் ஒன்று பால்
போலே நாறும் யிதல்லாமல் தேங்காய் பால்
போலே நாறுவதும் கருப்பன் பால் போலே நாறுவது
யிதுனாலும் தீராது./ போதுமையுண்டு பித்தத்தி
னாலே வாத ஆருக்கும் கஸ்தூ. சித். [?] போலெ நீராதை
நாறும் கந்தாளை போலெ நாறுவதும் ஆருவக்கும்
மென்றும். கருந்தனாயுமென்று யிந்த ஆறுமத
15அ தொன்றும் போது மருந்து கொடுத்தால் தீரும்
நாள் சென்றால் தீராது. சேத்துமத்தால் வந்ததுக்கு
பேராது. உத்தமன் தேசன் சந்திரிகன் சூரியன்
சக்கிலன் பிலவன் சதாசிவன் பிலவன்னன்

10

விஷ்டணன் யென்றும் பேர். உத்தமமென்பது பால நீர் போலே யிருக்கும். சதா சிவன் கத்தாழை விரசம் போலே யிருக்கும். பலவண்ணமென்பது உப்பு கரைத்தா போலே யிருக்கும் நுரையுண்டாம் விஷ்டணமென்பது மாவுங் கரைத்தாப் போலே யிருக்கும். தித்திக்கும். மந்தகாயமென்பது நீர் விட்ட

15. ஆ) விடமெல்லாம் எறும்பு மேயும் கடுத்து கதியும் யாதுநாள் சென்றால் பால் போலே இணக்கும் கேதுவமென்பது குதிரை மூத்திரம் போலே பலவர்ண மாயிருக்கும் யிப்படி அறியவும்.

மருந்து

ஆவாரை விதை பலம் 2, விளம் மாசின் பலம் 2, இது இரண்டு பொடி பண்ணி தேனில் குழைத்து விழுங்கவும் வேளை 1. க் கொட்டைபாக்குப் பிரமாணம் கொள்ளவும். மறுபடி நிலப்பனை பலம் 1

16 அ) நத்தை சூரி விதை பலம் 1, தேத்தான் விதை பலம் 1 இவை மூன்றும் அரைத்து தேனில் குழைத்து கொட்டைப் பாக்கு பிரமாணம் கொள்ளவும் மறுபடி நீர்முள்ளி விதையை பசுவின் மோரில் ஊறவைத்து மறுநாள் அரைத்து பசுவின் மோரில் கலக்கிக் கொடுக்க சல்ல நீரழிவும் போகும். மேற்படி ஆவாரம் பட்டையும் கடுக்காயும் பொடி செய்து தேனில் குழைத்துக் கொள்ளவும். மேற்படி நாவல்பட்டை பலம் 10, யிருநாழி நீர் வார்த்து உழக்காக காய்ச்சி தேன் கூட்டி குடிக்கவும் நீரழிவு 20ம் தீரும்

11

ஆ

வெள்ளைக்கு நீரடைப்புக்கு

16. ஆ

சித்திர மூலபட்டை பலம் 1

வெண்காரம் பலம் 1, வெண்காரத்தை ஓட்டில் பொரித்து, பட்டையும் வெண்காரத்தையும் சலம் விட்டு அரைத்து சுண்டக்காய் பிரமாணம் உருண்டை செய்து வேளை ஒன்றுக்கு ஒரு உருண்டை ரசு உருண்டை செய்து ஒரு உருண்டை தாலயை சுத்தி எடுத்து போடவும் ஆறு உருண்டை சாப்பிடவும். பச்சை பத்தியம் நீரடைப்பு சதை படைப்பு வெள்ளை நீங்கும். நீரடைப்புக்கு 14 நாள் பத்தியமில்லாமல் கொடுக்கவும். குரு சகாயம்.

17.அ

நீரடைப்புக்கு குடிநீரவது

17.அ

பேரீகருக்காய் 5, பொடி பண்ணி ஒரு கத்தாழை மடல் சோறெடுத்து முன் கருக்காய் தூள் போட்டு பானையில் தண்ணீராகும். வெங்காயம் 5 பல நசுக்கி சாறு பிழிந்து வெங்காரம் 1 பொரித்த தூள் பண்ணி முள்ளிரால் ரெண்டு பணவிடை தூள் போட்டு மத்தித்து கொடுக்கவும். மூன்று நாள் ஆறு வேளை கொடுக்கவும்.

ஆ

மருந்துண்ண நாளறியும் படி

17.ஆ [illegible]

உத்தமமாம் ஞாயிறும் உதய கதிர் வெள்ளி
மத்திமமாம் திங்கள் புதனாகும் // சந்துருவாம்
செவ்வாய் சனி மரணம் சேய் மானோர்க்கு தீர்த்தார்
நவமாம் மருந்துண்ணுநாள்.

18. அ [illegible]

சதக்குப்பை சூரணம். வாய்வு செரியாமை ஏக்கம்

சித்தன் கத்திமா முனிவன் நன்றாய்
செப்பிய சதகுப்பை சூரணஞ் சொல்வேன்//
உத்தம சதகுப்பை பலம் (ஒன்று) ஓமம் திப்பிலி கருஞ்
சீரக மிளகுடன் மல்லி// ஒத்த வகைக்கு கால்
பலமாய் நன்றாய் உரவாக யிடி வடிகட்டியே
வைத்து கொண்டு// கொத்த சீனி பலம் 5 ஒன்றாய்
கூட்டி தீவரு சுத கொள்ளவு போது.// யாரு போது
மண்டலம் கொள்ள இதில் தீரும். வியாதி கேள் வாய்வு
செரியாமை, ஏக்கம் அன்னதிவசம் இந்த
சூரணம் கண்டவுடனே ஓடிப் போகும். கை
கண்டது. குரு சகாயம்.

ஆ

18. ஆ

பூரமெழுகு குட்சம்

பேரண்டம் ஒரு ஓடு கொண்டு
வந்து எண்ணை எடுத்துப் போட்டு அடியில் சீலை
மண்செய்து ஆவாரம் வாரகால் அனல் வைத்து
பூரம் வராகனெடை 1 மேல் வைத்து குருஞ்சைக
பட்டை சார் விட்டு சுருக்கு கொடுக்க மெழுகாகும்
சகல தொழிலாகும். வியாதிக்கும் கொடுக்கலாம்.
இச்சை பத்தியம்.

19. அ

19. அ

பூரசெந்தூரம்

இலிங்கம் வராகனெடை 8, பூரம்
வராகனெடை 6, சூதம் வராகனெடை 4 ல். சீனக்காரம்
வராகனெடை இரண்டு. முட்டை வாயால் உடைத்து
அதற்குள் மருந்திட்டு சுட்டியால் சீர்வாசி

13

மணலாட்டு நடுவாக வைத்து இறுதியாக எரித்து கொண்டவும். கம்பாயா வரும் பக்குவத்தில் இறக்கி எடுத்து பொடித்து அரிசியுடை அனுபானம் வெல்லத்தில் தொடுக்கவும். பத்தியம் இச்சாபத்தியம். வியாதி தீரும்.

ஆ
19. ஆ

தாளக செந்தூரம்

கற்டா தாளகம் பலம் 3 . . . .

கட்டியா வாங்கி அந்து இரும்பு கரண்டியில் கரடா அப்பிரேகம் பதளா பதளா எடுத்து கரண்டியில் பரப்பி மேலே தாளக கட்டி வைத்து மேலே தேங்கா கொட்டாங் குச்சி கண்ணு பல்லாத்தாய் அதற்க்குள் பொருதலை அரைத்து தேங்காய் போலே உள்ளுக்கு பூசி கரண்டி மேலே மூடி சீலை மண் 7 செய்து சிறு அடுப்பில் தீபம் போலே ஒரு ஊதகால் எரித்து கரண்டியை கையில் பிடித்து உசாராக பார்த்து கொண்டு இருந்தால்
20 அ மஞ்சள் புகை எழும். உடனே சகுத்தியால் எடுத்து மேல் சிரட்டையை சகுத்தியால் எடுத்து ஒரு சட்டியில் உலர்த்திப் போட்டால் அதன் பின் நல்ல செந்தூரமா யிருக்கும். சகல விதமான சயம் தீரும். காசம் ! . . . .
அனுபானத்தில் பணவிடை செந்தூரம் 7, 9, 6, 5 வியாதி பலன் கண்டு வைக்கவும். இச்சாபத்தியம்

ஆ

சகல வாதத்துக்கும் கலக்கம்

சிறுகண் பூளைபூ வேரோடே, காயோடே

உருவி வந்து கையால் கசக்கி கண்ணுக்கு இரண்டு துளி, நாசிக்கு ஒரு துளி, காதுக்கு ரெண்டு ரெண்டு

14

தூள வார்க்கவும். மண்டைக்கி யோணி வாசம்
சகலமுந்தீரும். சங்கு . கிரா... கரிய பூலா நசிநசி
நசாயென்று வேப்பயாலையால் யாறக்கவும். தீரும்.

௨·௮ இருமலுக்கு பச்சிலை மருந்து

சாறுவேளாயிலை ஒரு குத்து
சிறுகள்ளா ஒரு குத்து, உரலாட்டு நீராகாரம் ஒரு
சிரங்கையிட்டு இடித்து வடிகட்டி ஆழாக்கு
உதயம் மூன்று நாள் குடிக்க இருமல் சீதளை காங்கை
இது முதல் தீரும். அரை ~~கசப்பாண்~~ கழப்பாண் பண்டம் மூன்று
நாளைக்கு நீக்கவும். நாளி நாள் கூட்டவும்.
இதை அற்பமாய் எண்ணை வேண்டாம். கைகண்டது.
குருசகாயம்.

ஆ பச்சிலை மூலிகையால் லிங்ககட்டு

நல்லதா உயர்ந்த லிங்கம் பலம் 1
கொண்டுவந்து எலுமிச்சம்பழச்சாறு, முலைப்பாலில்
மூன்று நாள் ஊற வைத்து எடுத்து கழுவாப் போட்டு, முசு
முசுக்கை சார் தனைச்சாறெடுத்து ஒரு ~~மூலர்~~ முழத் துணியால்
உடட்டி 11 பங்கா கிசைதிச்சு நிழலி உலர்த்தி துணியால்
ஒரு சன்ன ஒரு சுரு. வெண்டைப்பழமான் நெய்யால்
ஊலக்கெத்தி அடியால் ஒரு வைத்து ஒரு துணியால்
லிங்கத்துக்கு சுத்தி தீபத்தில் கொளுத்தி ஓட்டில்
வைக்கவும். இப்படி 11 முறை கொளுத்தி அரவாட்டு எடுத்து
தாகரண்டி வைக்க சகலசன்னைக்கும் உரைத்தலாம்
நல்ல கட்டு. குருசகாயம்.

15

22-அ கழுத்து வீக்கம் கண்டமாலைக்கு பத்து

சுக்கு, புளியாரை, வரட்டு மஞ்சள் பச்சரிசி, தேத்தான் கொட்டை, ஊமத்தங்காய்த்தோடு, மோர்விட்டு அரைத்து மோர்விட்டு குறுக்கி காய்ச்சி குழம்பு பதத்தில் இறக்கி வீக்கத்து மேலப் போடவும். இது கை கண்டது. குருசகாயம்.

ஆ இடுப்பு பிடிப்பு வாதத்துக்கு

எள்ளு ஒரு படி, பொடுதலை ஒரு படி, கருப்பட்டி பலம் 3 வெள்ளை வெங்காயம் பலம் 1, மிளகு பலம் (½) இவை எல்லாம் கூட்டி இடித்து உருட்டி வைத்துக் கொண்டு காலை, மாலை மூன்று நாள் சாப்பிட தீரும்.

23-அ கைகால் முடக்கத்துக்கு

சூடம் கிராம் 4, ஊசிகாந்தம் கிராம் 2, பாஷாணம் கிராம் 2, கௌரி பாடாணம் கிராம் 2, கொடிவேலி வேர் கிராம் 1, தாரம் கிராம் ½. இவை எல்லாம் பழச்சாறு விட்டரைத்து வில்லைப் பண்ணி காய வைத்துக் கொண்டு [illegible] கிராம் எட்டுமல் போட்டு தணலில் அது முன் செய்த வில்லையால் பாதி போட்டு உரலுக்குள் வைத்து அவன் மேல் புகை பிடிக்கவும். மூன்று நாளாகும் போது பிடிக்கவும். தீரும் வியாதி சூலம், பவுத்திரம், புண் அரைகள் பிடிப்பு முடக்குகள் தீரும். கொட்டை எண்ணெய் முழுகவும்.

P.T.O

23.அ

சன்னிக்கு தயலம்

இசம்பு, வெள்ளுள்ளி, திலாவேர்,
பூசுணுமுட்டை கோழிமுட்டை, நெய்நாயுறி, வேப்ப-
ம்பெண்ணெய் நாயுறி முன் மருந்து பலம் 1 ஆமணக்கு
எண்ணெய் நாழியும் கூட்டி அரைத்துருக்கு
கொண்டு அக்கு பதத்து கிளி கட்டிக் கொண்டு
சின் தயலத்தால் தோய்க்க கூடச்சட ஒத்தடம்
கொடுக்கவும். உள்ளுக்கும் காதிலை இருக்கவும்.

சன்னி தீரும்

16

24அ ஆல்வேர்தைலம்

ஆல்விழுதுவேர் பலம் 10, நறுக்கி இடித்து 10 படி தண்ணீர் விட்டு 1 படியாக காய்ச்சி வடித்து அதைகட்டிக் கொண்டு நாட்டு நல்லெண்ணெய், 1 பலம் சந்தனம் அரைத்து கலக்கி காய்ச்சி மெழுகு பதம் கண்டு இறக்கி கொடுத்துவர தீரும், வாயாதி உஷ்ணம், மேகம், இருமல், காத்த சாத்தம், உள்ச் சுரம் தீரும். குரு சகாயம்.

ஆ லவண போசன சங்குவா செந்தூரம்

கல்லுப்பு பலம் 1, வெடியுப்பு பலம் இந்துப்பு பலம் . 1. முலைப்பால் விட்டு அரைத்து கும்பக் கல வாயைத் திறந்து கரியை எடுத்துப் போட்டு உள்ளே அடைத்து சீலைமண் செய்து குக்குடம் புடம் போட்டு செந்தூரமாகும். குரு சகாயம்.

அடிபட்ட காயத்திற்கு

அத்திப்பாலை, உப்பு, மஞ்சள் அரைத்து அடிப்பட்ட இடத்தில் பூசவும்.

25அ அண்ட வாதத்துக்கு

கருப்பு கத்தரிக்காய்க்குள் ஒரு கழற்சிக்காய் பருப்பை வைத்து மேலே ஒரு துணி சுற்றி உமிக்காந்தலில் வைத்து காய் வெந்த பிறகு எடுத்து காயுடன் சாப்பிடவும். உப்பு வறுத்து சேர்க்கவும். புளி புகை ஆகாது தீரும்.

17

இரத்த காசம், ரத்தவுக்கு

புரங்கயுந் தேத்தாங் கொட்டையும் வறுத்துப் பொடித்து தேனை முந்து காசிடை தூள் ஒன்பது போது சாப்பட தீரும்

புளர்வாதிச் சூரணம்

வெள்ளை சாரணையை பாலில் வேக வைத்து அதை யெடுத்து உலர்த்தி சூரணம் செய்து வெந்நீரில் இருக்க சோகைபாண்டு, ஊதுபாண்டு தீரும்.

25ஆ

25 ஆ

குதக வாய்வுக்கு

வெங்காரம், இந்துப்பு, பொட்டுப்பு கல்லுப்பு, கறியுப்பு, பெருங்காயம், மாங்கு, சாரம்பு, திப்பிலி, ஓமம், நவச்சாரம், கோரோசனை சவுட்டுமண், கஞ்சாயிலை, வகைக்கு வராகனிடை 3 வெள்ளுள்ளி பலம். [illegible] மான் வெல்லம் பலம் 1 கையாந்த கரைச் சாற்றில் அரைத்து கொடுக்கவும்.

பிள்ளைகளுக்கு சுர மாந்தத்தினால் கருப்பு கண்டால்

பச்சை கற்பூரம் வராகனிடை 1 ரச கற்பூரம் வராகனிடை 1 முலைப்பால் விட்டரைத்து [illegible]கரணை சாறெடுத்து கருகு பிரமாணம் உருண்டை செய்து அதிபுரைத்து கொடுக்கவும். பச்சா பத்தியம்

18 26·அ
26·அ

இரத்த கழிச்சலுக்கு

ஆவாரம்பட்டை யரைத்து தூள்
பண்ணைப் புளியங் கொட்டை மேல் தோல் எடுத்து
இது ரெண்டுஞ் சேர்த்து சாப்பிடத் தீரும்.
பனைவெல்லமும், சுக்குங்கசாயமிட் டருந்தவும்.

வயிற்று வலிக்கு

அப்பள காரமும் எலுமிச்சம்பழச்
சாறும் குடிக்கவும்.

ரத்தசீத கடுப்புக்கு

அத்திக்கொழுந்தும், அரசங்
கொழுந்தும் மாஞ்சு வாழைப்பூ சாற்றில் அரைத்து
கொடுக்கவும்.

26·ஆ

பேய்ச்சொறிக்கு மருந்து

இந்துப்பு, பொடி பண்ணி
நெய்யாலே பொடி போட்டு ரஹயல் வைத்து
தலைக்கும் தேய்த்து மேழுக்கு பூசி மறுநாள்
ஸ்நானஞ் செய்யவும். தூக்கமில்லா பேய்ச்சொறி
தானாய்ப் போகும். சுருக்கான மருந்திது தான்
சுகமாய்ப் பாரே.

ரெத்த காசத்துக்கு

சீனல்சுட்ட சாம்பலால் மண்ணு வைத்து
பொடி பண்ணி குடிக்க தீரும்

அண்ட வாதத்துக்கு

நாயுருவி வாதை, குருந்தொட்டி
வேரும், மிளகு, வெள்ளி வெங்காயம் இது நாலும் கூட்டி
அரைத்து சாப்பிட அண்ட வாதம் தீரும்

27.அ

கெர்பமுண்டாக மருந்து

கருஞ்சூரை வேர் பட்டை
அரைத்து அதில் எண்ணெய் சேர்த்து குளிகை நால
நாள் இப்படி மூன்று நாள் சாப்பிடவும்.

நீர் அடைப்புக்கு

நெருஞ்சி வேரை அரைத்து
பசுவின் பாலில் தேத்தான் கொட்டை பிரமாணம் ஒன்று
தின்னவும் நீர் அடைப்பு தீரும்.
நெருஞ்சில் வேரை வெள்ளரி
விரை சமன் கூட்டி காடி நீர் வார்த்து அரைத்து
தொப்புளில் போடவும். மருந்தில் நெய் சேர்த்து தாளில்
பூசவும் தீரும்.

வெகு மூத்திரத்துக்கு

27ஆ

தலையுப்பு காஞ்சி அரைத்து
கலந்து நல்லெண்ணை கொஞ்சம் மறியவே உழக்காய்
கொள்ள அமர்ந்திடும். நீர் பாருடனேட காமஞ்சள்
அரைத்து சுண்ணம் கலக்கியே குடி நீர்க்கும். கலை
கொம்பு அருந்திருத்தம் மருந்த நீர் பாடு போ.டு..ம்
வெண்சங்காரம் காசினை பொரித்து நீராகாரத்தில்
கொடுக்கவும். ராத்திக்கு பசுவின் பாலில் கொடுக்கவும்

20

28 அ மாந்தத்துக்கு கஷாயம்

வலம்புரிச்சு, சிறுகாஞ்சொறி,
வில்வவேர், பாதிரிவேர், அதிமதுரம் ... கோஷ்டம்
நன்னாரி, நிலாவாரை சீரகம் ... கொத்தமல்லி
தும்பைவேர், பேரீச்சங்காய், ஆனைத்திப்பிலி
நெல்லிமுள்ளி ... சுக்கு ... மிளகு .. சரக்கு வகைக்கு
..... 4படி தண்ணீர் வைத்து 8ல் ஒன்றாக்கி தேன்கூட்டி
கொடுக்கவும்.

ஆ லிங்கசெந்தூரம்

சிறுகன் லிங்கத்தை ஒரு
.... வைத்து மஞ்சள் வேர படிச்சாறாலும்
ஒரு சாமம் சுருக்கு கொடுத்து எடுத்து சதாப்புயிலை
அரைத்து இலங்காய் பிரமாணம் அதற்குள் வைத்து
மேல் சிட்ட தேன் கூட்டு அரைத்து கவசஞ் செய்து
மேல் 7 சீலை மண் செய்து // வரட்டியால் புடமிடவும்.

பல்சுப்பொடி

கொம்மரக்கு வராகனெடை 3,
சீனாக்காரம் வராகனெடை 3, துருசு வராகனெடை 3
கடுக்காய் வராகனெடை 6, மாசிக்காய் வராகனெடை 3
தான்றிக்காய் வராகனெடை 6 அரப்பொடி வராகனெடை 6
~~[illegible]~~ 10 கொடுக்காப்புளி வராகனெடை 3
காச்சுக்கட்டி வராகனெடை 3 எலுமிச்சம்பழச் சாற்றில் ~~சாரம்~~ அரைத்து காய
வைத்து நுனைக்கல் பல் விளக்கவும்.

21

29·அ **சன்னிக்குப் புகை**

பொன்னரிதாரம் துமிநாதம்,
பொருயாடை சரியாடை தூள் பத அரைத்து
அர்க்கம் பாலால் ஆசு கலசத்தில் நன்னயமாக
உலர்த்தி புருடிம நாசியிலாடு புகையை நுகராய்
சன்னி முகவலி தோசம் நாவுய குயல்களும்
தான்மதாகு மாகும்பு வலைப் போகு பெருகுற்றவர்
வாதம் பெசகத்து வாரா தெய்வ முறைத்த பெரும்
புகையாகுமென நன்மையம் பெருகும் பொதிகையனோ
திபன். தாலனோ, தாலேனோ சற்குருவாகும் கத்தியமா
முனி தாலே தாலேனோ.

ஆ **குழந்தைகள் இருப்பு களைக்கு.**

ஆ

ஓங்கும் வெருச்சிமாசின்
மிளகு, முத்தல், கருஞ்சீர், திப்பிலி இறவே வகைக்கு
கழஞ்சரையாய் ஒட்டல் பெதுப்ப பொடித்து
நன்றாய் வாங்கும் தேனில் வெள்ளையுள்ளி விதை
தயிலமுஞ் சேர்த்து வந்த பொடியை அதின் கூறிம்
தலைக்கடுவாய் நாள் மூன்று யெவ்வ யாருக்கும்
யிளையமாருமல் மூச்சிழு களையும் தீர்ந்துவரும்.
இதுவே தேவர் முதற்குக் கணையாம் கிரதகூடல்
சதையும் முங்கிராலகு சொல பொதிகை முதல்வா
முத்தந் தருகவே முத்தரு மெய்ய கந்தீசர் முதல்வர்
முத்தந் தருகவே.

30·அ **வாந்திக்கு**

30·அ

ஆல்வேர், பற்பாடாகம்
நன்னாரி, கொத்தமல்லி கசாயம் வைத்துக்கொடுக்கவும்

22

கால்கை மரப்பு வலக்கிக்கு மருந்து.

கடுக்காய் 10, களிபாக்கு
சுண்ணாம்பு வெல்லம், காயம் போளம், காச்சுக்கட்டி,
குக்கில், ஆவாரைத எருமைப்பால் விட்டு அரைத்து
கொதிப்பாத்து பூசவும். தன் வலிக்கும், ராச்சுளை
கொறைய கட்டிக்கு போமே.

அ

ஊரை அலதம் அண்ட வாதம்

30. அ

வீரம் வராகனெடை 1
பூரம் வராகனெடை 1, லிங்கம் வராகனெடை 1
ரசசெந்தூரம் 1, வாளம் வராகனெடை 1 பீனாரி
சங்கு வராகனெடை 4, இலையை மைபோல்
அரைத்து சரக்கெல்லாம் போட்டு அரைத்து
வில்லை செய்து காய வைத்து காடைப் புடம்
போடவும் 5, 7 நாள் தேன் வெல்லத்தில் அனுப்பானம்
இச்சாபத்தியம். குரு சகாயம்.

31 அ

காரந்தி

ஆ

சிரங்குக்கு பூசு மருந்து

மிர்தார்சிங்கி ~~முருதார்சிங்கு~~ விராகனடை ।
துத்தம் விராகனடை । துருசு விராகனடை । நெல்லிக் காய்கெந்தகம் விராகனடை । ஊங்கால பச்சை விராகனடை । ரசம் விராகனடை ।, தேங்காய் எண்ணெய் பலம் ஒரு விட்டு அரைத்து பூசி இரும்பு கட்டி சுட்டு தேய்த்து குளிப்பாக்கவும் மூன்று நாள் பூசவும்.

பெருங்காய மெழுகு

சுக்கு, பெருங்காயம்,
இந்துப்பு, எள்ளை வெள்ளங்காரம், வளைக்கி விராகனடை ।, முருங்கையிலை சார் விட்டு அரைத்து குந்தி கொட்டை பிரமாணம் சாப்பிடவும் வயிறு பொருமல், மந்தம், அக்கினி மந்தம், அக்கரத்தின் பேதியுகள் யாவும் தீரும்.

-11

32அ கௌரி பாஷாணம் கால்கை பிடிப்புவலிக்கு

இரண்டுபடி எருக்கம்பூ கொண்டுவந்து நாலுப்படி தண்ணீர்விட்டு அரை படியாக்கி அதில் எள்ளெண்ணெய் அரைப்படி விட்டு அதில் இரண்டு ரூபா தூக்கம் மிளகும் ரெண்டு ரூபா தூக்கம் வெள்ளைப்பூடும் ஒரு ரூபா தூக்கம் கௌரி பாஷாணமும் போட்டுக்காய்ச்சி மெழுகு பதம் கண்டு எடுத்து சூசி அனல்காட்டிய வாக்கயுக்குதயிலம் உள்ளுக்கு கொடுத்தால் பாஷாணம் தள்ளிப் போட்டு ஓமம் இரண்டு ரூபா தூக்கம் பொடித்துப் போட்டு காய்ச்சி உள்ளுக்கு குடுக்கவும்.

32. ஆ தாளிசபத்திரி சூரணம் சயம் 96-க்கும்

தாளிசபத்திரி அராகணம் 40 [illegible] 40

சுக்கு, மிளகு, திப்பிலி நெல்லிக்காய், கடுக்காய், தான்றிக்காய், சீரகம், கருஞ்சீரகம், ஏலம், சாதிக்காய், சாதிப் பத்திரி, கிராம்பு, சிறுதேக்கு, செவ்வியம், அதிமதுரம், சிறுநாகப்பூ, இலவங்க பட்டை, இலவங்க பத்திரி, செவ்வியம், வாய்விளங்கம், சித்திரத்தை, வால்மிளகு, ஓமம், கோரோசனை, ஓமம், கோஷ்டம், கோரோசனை, தேவதாரம், அக்கிராகாரம், கொத்தமல்லி, முந்திரி, பெரியது தூதுவளைநீறு, நிலப்பனை கிழங்கு, அமுக்கிரா, நன்னாரி, முத்தக்காசு, ஆலாமச்சு, வெட்டிவேர், கண்டங்கத்திரி, நெய்தல் கிழங்கு,

33. அ நெய்ப்பொரா வகை சா கனிஞ்சா, செங்கொட்டை பலம் 10 … பரங்கிப்பட்டை பலம் 5, நெல்லிமுள்ளி, பலம் 5, தான்றிக்காய் பலம் 5, சுக்கு, சித்தரத்தை, சடாமாஞ்சில், இலவங்கப்பட்டை, வகைக்கு …… குரோசாணி ஓமம், நிலப்பனைக் கிழங்கு, வெட்பாலை, சாதிக்காய், கிராம்பு, சிற்றரத்தை, மிளகு, ஏலம், ஓமம், திப்பிலி, செவ்வியம், திப்பிலி மூலம், கார்போகி வித்து, கொத்தமல்லி, வாய்விளங்கம், கருஞ்சீரகம், சித்திர மூலம், குங்குமப்பூ, சிறு நாகப்பூ, கோரோசனை, அக்கரா வகைக்குப் பலம் ½, நெய், ஆவின் பால், வகைக்கு பலம் — சர்க்கரை பலம் 15, தேன் படி பலம் 15

ஆ செங்கொட்டை சுத்தி, சாணிப்பால் சுண்ணாம்பு புளியிலைச்சாறு குமரிச்சாறு இளநீர் அரசமர பூசவும்

கசாயம்

செங்கொட்டை

நெய்யாட்டு காசுக் நெய் எடுத்து சரக்கை சூரணித்து சேலையில் பதமாகத் தோய்த்து வைத்துக் கொண்டு வேளைக்குக் கொட்டைப் பாக்களவு சாப்பிடவும். பத்தியம் மிளகாய் ஆகாது. பால், நெய், வெள்ளாட்டுக் கறி, கறப்பான் பண்டம் தள்ளி, சாப்பிடவும், வாலுக்கெண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்யவும். ௪௰ நாள் மருந்து உண்ணவும்.

34. அ இனிக்குறைபாடும் ஆகாதென்பது.

34. அ

சனி, புதன், திங்கள் இந்த வாரங்களில் மருந்து கருதிமருந்தாம். வெள்ளியில்

26

அருக்கனால்மருந்து செய்து செவ்வாய் வியாழத்திலிட்டு
கொள்ள மாணைகள் தீரும்.

மேற்படி

அருக்கனால் பரணியும்,
திங்களால் சித்திரையும், செவ்வாய் உத்திராடமும்,
புதனால் அஸ்தமும், வியாழத்தில் கேட்டையும்,
வெள்ளியால் பூராடமும், சனியால் ரேவதியும்,
உடனே இந்த தினங்களில் மாணைகண்டால் தீராது

ஆ மாதருக்கல்லாதவழிகளுக்கு மருந்து

34·ஆ வேலாய்வருத்திசார்

மாதுளை v. குப்பைமேனி உருண்டை மாசிபத்திரி
குளத்து பாசி வகைக்குக் கொட்டைப் பாக்கு
பிரமாணம் அரைத்து சர்க்கரை கலந்து மூன்று
நாள் அருந்தினாலும்; காட்டுக் கருணை கிழங்கு
அரைத்து பாலில் கலக்கி நான்னாள் அருந்தினாலும்;
பேய்க்குமட்டிவேர், அறுகு பூரல், கார்கோலரிசி
சமனமாய் அரைத்து கண்டங்கத்திரி பழச்சாற்றில்
அருந்தினாலும்; நிலப்பனை கிழங்கு, பரங்கிப்
பட்டை வகைக்கு பலம் 1 சூரணித்து ஒருபடி
கொள்ளும்படி தண்ணீர்விட்டு வெட்டையறாய்
வற்ற வைத்து அருந்தில் சூரணத்தைப் போட்டு
35·அ கிண்டி எடுத்து அந்தி, சந்தி சாப்பிட்டு வந்தாலும்;
மாவிலங்கப்பட்டை சூரணஞ் செய்து தினைத்
தஅரு கலந்து கொட்டை பாக்குப் பிரமாணம்
மூன்று நாள் அருந்தினாலும்; எள்ளுக் கருஉள்ள

தண்ணீர்பழ க-யால் ஒரு பலம் ஓமத்தைப் போட்டு
கொடுத்தாலும்; கொடு வேலி, எருமிச்சங்காய்
பறபாணம் அரைத்து கொள்ளு அரைத்த தண்ணீரில்
மூன்று நாள் அருந்தினாலும்; குன்றிசா சாறு, ஆவின்
பால் வகைக்கு பழ-யா ஒன்றாய் கலந்து மூன்று
வேளை கொண்டாலும்; தீவந்த நாயுருவியும், சிறு
பீளை பூ அரைத்து நீரில் கலக்கி கொடுத்தாலும்;
புளியம்பட்டையை அரைத்து பாலில் மூன்று நாள்
அ கொடுத்தாலும் சூதக கட்டு நீங்கி மாதருக்குண்
டாகும்.

35.அ

அருமேல் மலக்கட்டுக்குள்ளம் ஆரவயிறு
சுருக்கு சுருக்கென்று வலிக்கும்.

அன்னவெண்ணெய் பழ சுக்கான்,
சுத்தகாசு கழஞ்சு 2, வரப் புளியல் கொடுத்து,
சாரணை கொடுத்து வகைக்கு ஒரு கொட்டை
பாக்கு அளவுமாய் அரைத்து எண்ணெயில் போட்டு
காய்ச்சி வைத்துக் கொண்டு சூதகமான நாள்
முதல் பதினைந்து நாள் வரை ஒரு கரண்டி வீதம்
உண்டுவர தீரும். பத்தியம் இருக்கவும்.
உறட்டி மலடு தீரும்.

36அ கெர்ப்பப்புழுக் குணம்.

வாந்தி பண்ணும், வயிறு நோகும். இரண்டு மாதம், மூன்று மாதம் குறுக்கு நின்று நின்று உண்டாகும். உடல் வெளுக்கும் திணவுண்டாகும். இதற்கு நிவர்த்தி:- ஆதண்டையிலைச் சாறு, கரும் பொன்னாங்கண்ணிச் சாறு, சிற்றாமணக்கெண்ணெய் கருப்புக்கட்டி இவை எல்லாம் ஒன்றாய் கலந்து காய்ச்சி ஊட்டுக்கு ஆலக்குடமா யிருக்கிற மூன்று நாள் கொள்ள புழு விலகும். கருத்தாங்கும். பாவயலைச் சாறு, குமட்டிக்காய்ச் சாறு, எருக்கிலைச் சாறு, ஊமத்தையிலைச் சாறு, வாகைக்கியாழ! வேப்பெண்ணெய், ஆமணக்கெண்ணெய் ஒன்றாய் வாட்டு ஆமெருகு பதமாக காய்ச்சி காசிடை கொள்ளவும். சில கட்டு கெர்ப்பப்புழு. அனைமா வாய்வுந் தீரும்.

கெர்ப்பப்புழு குணம், நிவர்த்தி

மாதவிடாய் காலத்தில் அடி வயிற்றில் சுருக்கென்று வலித்து குத்தும், இறைச்சி கழுவின தண்ணீர் போல காணும். புருஷனுடன் கூடும் காலத்தில் அது போலவே யோனியில் நீர் பொசிந்து இலைபார் கண்டிபரும், சீந்தில்வேர், நாணாங்கள்ளியிலை, தள்ளுவேர்க் கசாயம் வைத்து ஆவின் நெய் விட்டு குளித்தது முதல் மூன்று நாள் உண்ணத் தீரும். பத்தியம் பால் அன்னம் கொள்ளவும்.

37அ பிள்ளைகளுக்கு பொது மாந்தயோகம்

சித்திரமூலம், சாரணை வேர், பொன்னாங்காணிவேர், சமனாய் அரைத்து

தேங்காய்ப்பாலால் குளித்த முதல் மூன்றுநாள் அருந்த
கெர்ப்பப்புழு சாகும். சாப்புகுதி தீரும். முன்போல் பத்தியம்.
நந்தியாவட்டைவேர் சூரணம் பண்ணி சூதகமாயிருக்கும்
போது பெருங்காய மரமானம் ஆவின் பாலிற்கொள்ளவும்.
குறட்டைக்கிழங்கு பலம் 2, ஆருதிண்டாப்பாளைவேர் பலம் 3
வெள்ளுள்ளி பலம் 3 வசம்பு பலம் ௨ சித்தாமணக்கெண்ணெய்
பதமாய்க் காய்ச்சி வடித்து சூதகமாகும் 4 நாளைக்கு முன்
கொடுக்க வயறு கழியும். மோருஞ் சாதமுண்ணவும்.

37. ஆ..... உள்ளியை அரைத்து 6 நாழிகை சென்ற மோரில்
சூதகமாயிருக்கிற மூன்று நாளும் கொள்ளவும்.
சூதகமாக யிருக்கும் போது சீனிபலம் 1, அரைப்படி
ஆவின் பாலில் போட்டு கரைத்து கொடுத்து மறு
தினத்திலும் ~~பழையே~~ மோர்ப்பழையே கொடுத்து மூன்றுநாள் பசம்
உள்ளியை எருமை சாணியால் அவித்து மறுநாள் எடுத்து
தோல் நீக்கிப் பலமறிந்து இரண்டு மூன்று உள்ளியை
அரைத்து 1/4 படி ஆவின் பாலிற் கொடுக்க கெர்ப்பப்புழுவும்
வயிற்றிலுள்ள மற்றப் புழுக்களுஞ் செத்து சாகும்.

38.அ
38.அ

பெரும்பாட்டெண்ணெய்

புணர்ச்சியினால்
சூடு வெட்டையுண்டாகி அது அதிகரித்து கருக்குழியுந்
தியமண்ணாகி பெரும்பாடு தோன்றும். செவ்வாழைநீர்
போல உதிரம் வடிந்து கொண்டிருக்கும். வயிற்று
வலி சோமதாதுவுண்டாம். இதற்கு நிவர்த்தி நாவல்ப்
பட்டையை புளித்த எருமை மோரூற வைத்திருந்துப்
பார்த்து அதில் சாரத்தையைச் சந்தனம் கலந்து
கொள்ள தீரும். நெல்லிக்காய்சாறு, எலுமிச்சம்பழச்சாறு

கருப்பூச் சாந்து ஆவின் நெய் வகைக்கு பலம் 1.
நாரத்தை பத்திர பலம் 1. சாதிக்காய், ஏலம், கிராம்பு
அரத்தை, அதிமதுரம், நிலப்பனை கிழங்கு, வகைக்கு பலம் 1
அரைத்துப் போட்டு பதமாக காய்ச்சி
38- ஆ தேங்காய்ப்பாலில்
கரண்டி வீதம் கொள்ள பெரும்பாடு, வெள்ளைநீர்
சுருக்கு, நீர்கட்டு, சதையடைப்பு, நீங்கும்.
முருங்கைப்பூவை அரைத்து தேங்காய்ப்பாலிலாவது அல்லது
வெள்ளாட்டுப் பாலிலாவது வெல்லம் சேர்த்து சாப்பிடத்
தீரும். சிவந்த அது செங்கல் பொடித்து மெல்லியமாய்
2, 3 தடவை வடிகட்டி அதற்கு நிகர் சீனி சேர்த்து
வெருகு கடிதாள் அந்திசந்தி 3 நாள் கொள்ளத் தீரும்
மூல, அசைத் தள்ளவும்.

39-அ குதக வாய்வு

தேகத்தில் உதரம் நிறும்
அதி குளத்தால் வாயுவுஞ் சேர்ந்து குதக வாயுவுந்
தோன்றி குதகமாகும். போது அடிவயிர் வலிக்கும். குதகந்
தடித்து காணும். தலை வலிக்கும். வயிறு, உடல் பெருக்கும்.
இதற்கு நிவர்த்தி :- கடுக்காய்ப் பொடி, மிளகு
கருஞ்சீரகம், இந்துப்பு, கறியுப்பு, வெடியுப்பு, கல்லுப்பு,
வளையலுப்பு, வகைக்கு பலம் 1, சீனக்காரம், நவச்
சாரம், சத்திசாரம் வகைக்கு பலம் 3 பெருங்காயம்,
வாய்விளங்கம், வால்மிளகு, கோஷ்டம், கருஞ்
ஆ சீரகம், வகைக்கு பலம் 1 இவைகளை பொடித்து நீர்
வற்றின கொப்பரை தேங்காய்க்குள் அடைத்து துணியால்
அரைத்து 7 நாள் எடுத்து ஒரு நீக்கி மெழுகு போலாக்கி

குழியில் அடைத்துக் கொண்டு இச்சாபத்தியம் காத்திக்காமல் பிரமாணம் இருபோது சாப்பாட்டு வந்தால் சூதக வாய்வு கட்டி, குன்மம் தீரும்.

சூதகா வாய்வு

வெள்ளைப்பூடு தோல் நீக்கியது பலம், செவ்வியம், மல்லி, வாய்விளங்கம், ஓமம், திப்பிலி, திப்பிலி மூலம், வெப்பாலை அரிசி, வசம்பு, நற்சீரகம், கருஞ்சீரகம், சித்திர மூலம், அதிமதுரம், சுக்கு, கோஷ்டம், தாமலை, அட்டுப்பு, இந்துப்பு, சிறுதேக்கு, சிவதை, பெருங்காயம், கடுகுரோகணி, கழற்சிப்பருப்பு, வகைக்கு 3 [illegible] சூரணஞ் சித்தாமணக்கெண்ணை, கருப்புகட்டி, சேர்த்து

4வது லேகியஞ் செய்து அந்தி சந்தி புன்னைக்காய்ப் பிரமாணம் 20 நாள் உண்ண வேண்டும். சாப்பான் பதார்த்தந்தள்ள சாப்பாட்டு வர சூதகா வாய்வு, கெர்ப்ப வாய்வு, குன்மம் தீரும்.

நீதம் பச்சளை குளம்

பேறுகாலத்தில் யோனி மலரும் போது அதில் வாய்வு அடங்க அதனால் இரத்தமும் சலமும் தடைப்பட்டு உடலில் அடைபட்டு சீழ்ச்சவ்வும் சுத்தி, முளைத் தேங்காய்ப்போல் யோனியிற் றோன்றி நீர் பொசிந்து கொண்டிருக்கும். இடுப்பு தொடையும் உளையும். இதற்கு நிவர்த்தி :- ஓமம், வெள்ளுள்ளி, பாம்புக் கண்டம், ... மலைக் சோமனுப்பு, வசம்பு, குங்குலியம், ... நிறையாய் பொடித்து துணியால் வைத்து உருட்டி அதை தேப்பெண்ணையாற்று வைத்து

32

40. ஆ யோனியாற் அதையூட்டி, அரையபட்ட ஐயுள்ளதை கருங்கு
குருவை மாவுடன் சேர்த்தரைத்து மோர்விட்டு இடக்
காச்சி மூன்றுநாள் உண்ண நிதம்ப சூலை குணமாகும்.

சூதக வலிக்கு

செந்தொட்டி வேர்
அரைத்து தொப்புளை சுத்தி தடவத் தீரும்.
செப்பு நெருஞ்சியை
மூலைப்பாலில் அரைத்து கொடுக்கத் தீரும்.

வயிற்றில் இறந்த பிள்ளை விழ

துளசிசாறு படி 4
நல்லெண்ணெய் படி ... ஒன்றாய் கலந்து கொடுத்தாலும் விழும்.
நல்லெண்ணெய் .... அதைபூசல் ..... கூட போட்டு
கொடுத்தாலும் வயிற்றில் மாந்த பிள்ளை விழும்.

41. அ

பிள்ளைப்பேறு வருத்தப்பட்டால்.

நாய்மண்டையோடு
கொஞ்சம் எடுத்துப் பொடி செய்து விளக்கெண்ணெய்
குழப்பி உள்ளுக்கு கொடுத்து வயிற்றில் சுக பிள்ளை
பிறக்கும். சிவனார் வேம்பை மூலைபாலில் அரைத்து
தொப்புளில் தடவ பிறக்கும். ~~தொ~~ கவிழ்தும்பையான் வடக்கு
வேரைப் பிடுங்கி குளிசமாடி ~~குந்திக்கி~~ நெற்றிக்கு நேரே
மயிரில் கட்டி அதை பார்க்க பிறக்கும். பிள்ளைபேறு
வருத்தப்பட்டு . . கொடுத்தால் வயிற்றில் சிசுவான்

வெண்ணெயைப் போல அது உருகினால் பிள்ளை
பிறக்குமென்றும், உருகாவிட்டால் வயிற்றில் பிள்ளை
செத்ததென்று அறியலாம்.

41 ஆ பச்சைப்பாலும், கோரோசனையும்
மத்தித்து வருத்தப்பட்டு பிறந்த குழந்தை நாக்கிற் பட
மயக்கந் தீரும்.

நஞ்சு கொடி விழ

கருநெல்லி.. கொழுந்து
வேப்பங்கொழுந்தும், முருங்கைக் கொழுந்தும் வகைக்கு
ஒரு பிடி, கடுக்காய் ஒன்று இவை எல்லாம் நசுக்கி
ஒருபடி தண்ணீரில் போட்டு எட்டொன்றாய் காய்ச்சி
கொடுக்க விழும்.

பிள்ளைபெற்ற வலி பொறுத்தால்

எள்ளும், பொரியும்,
கருப்புகட்டியும், சமன் கொடுக்க தீரும்.
மஞ்சள் அரைத்து தேவையான அளவு தண்ணீரில் கலக்கி அடிக்கடி
குடிக்கத் தீரும்.

42 அ பச்சை உடம்பால் வயிறு பொருமி வலித்தால்

பெருங்காயம் வராகனெடை,
வசம்பு வராகனெடை 1, கொடிவேலி வேர்ப்பட்டை
வராகனெடை 3 சுக்கு வராகனெடை 4, ஓமம் வராகனெடை

34

கடுக்காய்தூள் வராகனெடை 6, திப்பிலி வராகனெடை 7
கோஷ்டம் வராகனெடை 8, சிவதைவேர் வராகனெடை 9
இவை வறுத்து சூரணித்து திரிகடுகு பிரமாணம்
பசுவின் நெய்யிற் கொள்ளத் தீரும்.

கெர்ப்ப காலத்தில் நீர்த்தாரை கண்டால்

அதிமதுரம் ~~சந்தனம்~~ மஞ்சிட்டி
கிராம்பு, செங்கழுநீர் கிழங்கு, கொட்டாத்தி நு[illegible]
வகைக்கு ஒரு ~~கழஞ்சையா~~ காசிடை அரைத்து பாலில்
கலக்கி சர்க்கரை கலந்து மூன்று நாள் கொடுக்கத்
தீரும். நெய்தல் கிழங்கு, அதிமதுரம் வெள்ளி
42ஆ லோத்திரம் சந்தனம் நன்னாரிவேர் சமன் எடுத்து
அரைத்து பச்சரிசி கழுநீரில் கொடுக்கத் தீரும்.
பற்படாகமும், நெல்லிச் சாம்பலும் அரைத்து பாலில்
குடிக்கத் தீரும்.

மாலையால் தாகம், சுக்கில கண்டால்

அத்தி, ஆல், மா, அரசு,
இவைகளின் கொழுந்து சமனெடுத்துக் கஷாயஞ்
செய்து குடிக்கத் தீரும். குதிரை எலும்பை ஆவின்
பால் விட்டரைத்து கொட்டைப் பாக்களவு எடுத்து
1/4 படி பாலில் கரைத்து 3 நாள் கொடுத்து 6 நாள்
வரை உப்புப்புளி தள்ளி பத்தியமாயிருக்கத் தீரும்.

43. அ. நாள்கரந்தையாலைநர் தேங்காய்ப்பாலமாணம் தோல் நீக்கியரைந்த எருள்ளிபழ வ ஒன்றாய் சேர்த்தரைத்து பாதிந்த சாதத்தில் ஒரு துட்டெடை நல்லெண்ணை விட்டு மூன்று நாள் கொடுக்கத் தீரும்.

கெர்ப்ப காலத்தில் காணும் சுரத்துக்கு

சிற்றாமுட்டிவேர் பேராமுட்டிவேர், சீந்தில்கொடி, நிலவேம்பு, சுக்கு, திப்பிலி, இவைகளை யரைத்து கஷாயஞ் செய்து கொடுக்க தீரும்.

கெர்ப்ப ஸ்திரீகளுக்கு காணும் நீர் சுருக்குக்கு

நீர் . . . . . முள்ளியை குப்பைமுள்ளியால இவை ஒன்றாய் அரைத்து தின்றாலும்; நன்னாரி வேரையாவது உலர்ந்த ரோசாப்பூவையாவது கஷாயஞ் செய்து சாப்பிட்டாலும் நீர்ச் சுரப்பும் நீர்ச் சுருப்பும் நீங்கும்.

ஆ. கெர்ப்பவதிகளுக்கு நீரடைத்தல்.

ஆ

பொரித்த வெங்காரம் வராகனெடை 2, சங்கம்வேர்ப் பட்டை, கிலுவங்கபத்திரி மாசு, முள்ளங் கீரைவேர், பொன்னாங் கண்ணி, சந்தனம், வகைக்கு வராகனெடை 1 காடியில் அரைத்து கலக்கி கொடுக்கத் தீரும்.

கெர்ப்பமான போது வலி கண்டால்

4 திங்களால் இரத்தம்
கண்டால் நெய்தல் கிழங்கு நொச்சிவேர் பாலால்
கொடுக்கத் தீரும். 5ஆம் திங்களால் வயிறு வலித்தால்
ஆம்பற்பூவும் இலாமிச்சை வேரும் அரைத்து பாலாற்
44. அ கொடுக்கத் தீரும். 6ம் திங்கள் கெர்ப்ப குடல் அழன்று
சுற்றி வலித்து அழன்று நீர் சுருக்கல் தப்பாலா நொந்தால்
பழம் நெய்தல் கிழங்கும் அரைத்து பாலால் கொடுக்க
தீரும். 7ஆம் திங்கள் வயிறு வலித்தால் இலாமிச்சம் வேர், சந்தனம்
தக்கோலமும், அரைத்து பாலாற் கொடுக்கத் தீரும். 8ஆம்
திங்கள் கைகால் அயர்ந்து பசியில்லா திருந்தால்
தாமரைப்பூவும், நெய்தல் கிழங்கும் அரைத்து பாலிற்
கொடுக்க தீரும். 9ஆம் திங்கள் சூல் வலிக்கில் அரசம்
தோலும் மருதந்தோலும் அரைத்து பாலால் கொடுக்க
தீரும். 10ஆம் மாதத்தில் வயிறு வலிக்கு. சர்க்கரை
இருப்பைப் பருப்பும் அரைத்து பாலாற் கொடுக்கத்
தீரும்.

ஆ
கெர்ப்பவதிகளுக்கு கரு உள்ளக்கு மெண்ணை

சித்தாமணக்கு எண்ணை

படி 1, ஆவின்பால் படி 2 தேசல் நீக்க அறுதை
சாறுள்ளபடி 2, கருஞ்சீரகம் விராகனெடை 2
கழுதைப்பால்படி 2, ஒன்றாய் கலந்து சிறு தீயிலெரித்து
மெழுகு பதமாகும் போது அதில் அகையாட்டால் [illegible]

37

வெள்ளை போலிருக்கும். அந்த பதத்தில் இறக்கி வடித்து கெர்ப்பவதிகள் ஐந்தாம் மாதத்தில் 5 நாள் அந்தி சந்தி இரு களஞ்சி எடைதம் சாப்பிட்டு மறு பத்தியம் 5 நாளிருக்கவும். இப்படி ஏழாம் திங்களையும் ஒன்பதாந் திங்களையும் சாப்பிட்டு உப்பு புளி தள்ளி பத்தியமா யிருந்தால் கருவை யழிக்கும் கிரந்தி சூலை முதலான பிணிகள் நீங்கி குழந்தை ஆயிசுவுடன் பிறக்கும்.

54-அ கருவளர்க்கும் கெர்ப்பவதிக்கு நெய்

பர்ப்படாகம்,

கரிப்பான் இலைக்கு ஒரு எலுமிச்சங் காய்ப் பிரமாணம் அரைத்து ஒருபடி பசுவின் நெய்யில் கலக்கி சிவக்க வெந்த பதத்தில் இறக்கி கெர்ப்பந் தங்கின ஐந்தாம் மாதம் முதல் கொண்டு சிறு கரண்டி அளவாய் நெய் முருளையுங் சாப்பிட்டால் மேற் சொன்ன பிணிகள் நீங்கி குழந்தை ஆயுசுவுடன் பிறக்கும்.

ஊற்று கிரந்தி, செப்பு

நெருஞ்சில், குளிமட்டான், முருக்கிலை, சங்கிலை, சிறுசெருப்படி, தால்வ மத்தி, கருநொச்சி இவைகளின் சார்வகைக்கு படிவ, ஏ·குள்ளச் சார்படி 2 ~~[illegible]~~ ஏரண்ட எண்ணை படி। கருஞ்சீரகம் இரு ஆ சிறங்கை, அதிமதுரம், திப்பிலி, இலைக்கள்ளி பலம்।

செங்கத்தாரிப்பட்டை, வசம்பு, காயம், வெள்ளுள்ளி,
வகைக்கு பலம் - 2 அரைத்து கல்க்க காச்சி வடித்து
ஐந்தாந் தினங்கள் முதற் கொண்டு கரப்பான் மதார்த்தம்
நீக்க கரண்டி வீதமுண்டு வர மேற் சொன்ன மாதிரி
நீங்க குழந்தை ஆயாசப்படல் ~~[illegible]~~ பறக்கும். குழந்தைக்கு
நோயும் செங்கரப்பான் கொள்ளி கரப்பன் முதலான
கரப்பான் தீரும்.

கெர்ப்பவதிகளுக்கு பேதி.

சித்தாமணக்கெண்ணை,
கரு நொச்சி, கையாந்தகரை, வகைக்கு சாறுபடி 1
46ம் எழுமிச்சம்பழச் சாறு, நல்லெண்ணை, பசுவின் நெய்,
வகைக்குபடி - கி மிளகு பலம் - 2. காயம், குளமட்டான்,
செப்பு நெருஞ்சில், வகைக்கு பலம் 1 அரைத்து கல்க்கி
காய்ச்சி வடித்துக் கொண்டு குளித்த முதல் மூன்று
தினம் ஒர்க் கரண்டி வீதம் நாலு தடவை கொள்ள
கெர்ப்ப வாய்வு, அகு, வாந்தி தீரும்.

உளக்கெண்ணைபடி 8 தும்பை,
பொடுதலை, கற்றாழை வகைக்குச் சாறுபடி 1, திரி
கடுகு, திரிபலை, கோஷ்டம், ஏலம், சாரம்பு, வகைக்கு
பலம் 1 அரைத்து கல்க்க காய்ச்சி வடித்துக் கொண்டு
~~ஒன்றுவிட்டு ஒருநாள்~~ ஒரு நாள் விட்டு ஒரு நாள் ஒரு கரண்டி வீதம்
40 நாள் கொள்ள கெர்ப்பாசயசுத்தி, வயிற்கட்டி,
நீராமை, கெர்ப்பசூலை, சூதக கட்டி, மலடு, தீரும்..

39

46. ஆ சூதகமில்லாத பெருக்குக்கு

பேய்க்குமட்டி வாதை,

நேர்வாளம், சமன் கூட்டி குழித்தைலம் இறக்கி ஒரு
காசிடை தயிலத்தில் ஒரு காசிடை மஞ்சள் பொடியை
மத்தித்து குளித்த முதல் மூன்று நாள் கொள்ள பேதிக்கு
பத்தியம். நீர்கஞ்சி கொள்ள சகல கெர்ப்ப
ரோகங்கள் தீரும்.

சூடுபலம்!, கல்லுப்பு

இந்துப்பு, வளையலுப்பு, வெடியுப்பு, நவச்சாரம்,
சாவுக்காரம், வெண்காரம், பெருங்காயம், வகைக்கு
வராகனெடை 2 சுத்தி செய்து. வாளம் வராகனெடை 10
இவை எல்லாம் பொடித்து மூன்று முந்திரி தேங்
காய்ப்பூவால் மத்தியில் வைத்துப் மாட்டு வயலாயவிருந்து
47அ ~~[illegible]~~ ஈரால் அவிழ்ந்து அதில் வெந்த மருந்துகளை
அரைத்துப் போட்டுக் காய்ச்சி காசிடை கொள்ளவும்.
நெய்யை பேதிக்கும் பத்தியம் மோர்சாதம் சகல
கெர்ப்ப மாணைகளும் தீரும்.

பேய்க்குமட்டிப் பழம், சூப்பதை

தண்ணீர் விடாமல் பிழிந்து மசித்து வடி(கட்டிக்)கொண்டு
இந்துப்பு, வெடியுப்பு, வளையலுப்பு, கல்லுப்பு, நேர்வாளம்,
வகைக்கு வராகனெடை 2 பெருங்காய பலம் வராகனிடை
ஆவின் வெண்ணெய், பழம் புளி. வகைக்கு நார்த்தங்
காய் சாரமானம் இவை எல்லாம் அரைத்துப்
போட்டு மெழுகு பதமாக காய்ச்சி சிமிழில் அடைத்து
கொண்டு ஒரு மாக்காலை மூன்று தடவை கொடுக்க
வயிர் (கழியும்) போகும். அதிகப்பட்டால் குளிர்ந்த
ஆ தண்ணீரில் ~~குடித்து~~ குளித்து மாவுகுண்ண கெர்ப்ப வைப்புகுதி

திருமி, குத்தகட்டியும், மேற்சொன்ன கெர்ப்ப ரோகங்கள் தீருந் திரும். அயயாளைச் சாறுபடி, சிவதை, கடுகு ரோகணி, வசம்பு, உள்ளி, அக்கராகாரம், இந்துப்பு காயம் வகைக்கு பலம்¼ ஏரண்டத்தெண்ணைபடி 2 பதமாய்க் காய்ச்சி வடித்து காலைமுதல் ஒரு துட்டெடை 10 நாள் சாப்பிட கெர்ப்ப ரோகங்கள் தீரும்.

48அ கெற்பஸ்திரிகளுக்கு 10 மாதத்துக்கு வரும் நோய்க்கு

கெர்ப்பவாமாதுகளுக்கு

முதற் திங்களால் கெர்ப்பஞ் சருவிலையாய் விலகில் தாமரைப்பூ, சந்தணம், இலாமிச்சம் வேர் நீர்விட்டு அரைத்து பாலிற் கொடுக்க தீரும். இரண்டாம் மாதம் விலகினால் நற்கோலமும், தாமரைப்பூவும் அரைத்து ஆவின் பாலிற் கொடுக்க தீரும். மூன்றாம் திங்களால் கண்டவர்க்கு. முன்மை ஏட்டில் சருகதியாகுந்தது.

பச்சை உடம்பால் எடுத்த சுவாச காசத்துக்கு

சுரங்காயும், தலைவலியும்.

வாயக்கும், தாகிக்கும், வயிறு பொருமி, யாரைந்து கழியும். இளைப்பு, பெருமூச்சு, மயக்கங் காணும் 5, 7, 9 அல்லது 18 நாளில் மரணம். இந்த செய் தப்பாமல் வியாதி நீங்கும். நிவர்த்தி :- கடுக்கு சிப்பியும் பனைவெல்லமும் அரைத்து கொடுக்கவும். வெள்ளை உப்புக் கண்டத்தையாவது அதன் ரோமத்தையாவது சாராயத்தில் அல்லது இளவெந்நீரில் அரைத்து கொடுக்கவும். முருங்கைப்பட்டை கடுக்கிப்

கரும்பு, பனை வெல்லமும் சமனாய் அரைத்து கொடுக்கவும்.

கடலுப்பு, புளியாரை, சீயக்காய் கொழுந்து, நெல்லிக்காய்,

48 ஆவெல்லாடு, காடை, மான், சுறாமீன், மயாரை, குறவை, வரால்,
மிளகு, சர்க்கரை, தேன், சிறுகீரை, ஆவின் பால், நெய்,
சிறுபயறு, துவரை, பொன்னாங்காணி, அவரைப் பிஞ்சு,
புடலம், பிஞ்சு, கதலி வாழைப்பழம், கொதித்த தண்ணீர்,
அத்திப்பிஞ்சு, முருங்கைப்பிஞ்சு, ஆயாதிகளை ஆக்கும்.

பாலவாகடம்: செங்கிரந்திக் கணம்

பிள்ளை பிறந்தவுடன்

தொண்டை கட்டி உணக்குதல் போலாகும். நிரும்புமுங் கட்டி வயிறூதும். கால், கை, சிவப்பேறும். இதற்கு நிவர்த்தி: கோரோசனையை முலைப்பாலில் அரைத்து கொடுக்க தீரும். கஸ்தூரி வல்லாயாலை, குன்றிமணியை, எ.கிள்ளி ஓர் நிறையாய் பழச்சாறில் பிழிந்து கொடுத்து கொடுக்க தீரும். முருங்கையிலை சாற்றை பிழிந்து கொடுக்க தீரும். செம்முள்ளியிலையை தண்ணீரில் போட்டு காய்ச்சி குளிப்பாட்டவும்.

ஆறாத சூல புண்ணுக்கு

49. அ

முற்றிய தேங்காய் துருவி

அதில் புளியம் இலை மேல்தோலையை பொடித்துப் போட்டு பிசைந்து பிழிந்து தயலம் வடித்தை புண்களில் தடவ ஆறும் வீக்கமும் வற்றும்.

சுரத்துக்கு நசியம்.

தும்பையிலையுடன்.. மிளகு ஒன்றாய் சிதைத்து நாசியில் நசியம் பண்ணத் தீரும்.

திப்பிலியுடன் . வேலிப்பருத்தியிலையை ... ஒன்றாய்
சிதைத்து நாசியில் நசியமிட்டாலும் அல்லது
இந்துப்பு, வெள்ளை கொம்பன் பாளையிலை இவைகளை
ஒன்றாய் சிதைத்து நாசியில் நசியமிட்டாலும்
சுர தோசமுந் தீரும்..

49 ஆ
அ
குளிர் சுரத்துக்கு

ஏலம், கிராம்பு, சுக்கு,
திப்பிலி, முந்திரிப்பழம், பேரீச்சம்பழம், தாளீசபத்திரி,
சாதிக்காய், சாதிபத்திரி, கோரோசனை, இலவங்கப்பூ,
செண்பகப்பூ, அதிமதுரம், கோஷ்டம், விலாமிச்சம்வேர்,
மாசிக்காய், சந்தனம், இலவங்கபத்திரி, ஓரிலை
தாமரைவேர், வகைக்கு விராகனிடை 1, இவை கட்கு
நிகர் கடுகுரோகணி பொடி செய்வித்திரால் இரண்டு
சாமமரைத்து பருத்தி விதை பிரமாணம் உருண்டை
செய்து உட்சுரம், அதிசாரச் சுரம் ஆமைச்சுரம், வெப்புச்
சுரம் இவை கட்கு முலைப்பாலில் தோச சுரத்துக்கு
குதிரைவால் கசாயத்திலும் கொடுக்க தீரும். காசம்
சுவாச காசம் இரத்த காசத்திற்குத் தேனிலும் கொடுக்க
தீரும்.

50 அ
குங்குமப்பூக் குளிகை

குங்குமப்பூ பலம் 1,
திரிகடுகு, திரிபலை, சாதிக்காய், கிராம்பு, ஏலம்,
சந்தனம், தேவதாரம், கடுகுரோகணி வகைக்கு
பலம் 1, இவைகளை 6 சாமம் எலுமிச்சம்பழ சாற்றிலும்

அட்டி சிறுபயறளவு உருண்டை செய்து கொண்டு அனுப்பானங்களிலே குளிர் சுர முதலான சன்னி சுரந் தீரும.

சுரம் 64-க்கு மாத்திரை

நாளகம், கெந்திரசம், கருநாபிக் கிழங்கு, வெங்காரம், திப்பலி, வாளம், சுக்கு, கடுக்காய், நெல்லிமுள்ளி, வெள்ளைப்பூடு இவைகளை கையாந்தகரை சாற்றில் 4 சாமம் அரைத்து மிளகு பிரமாணம் உருண்டை செய்து ஒரு நாளைக்கு மூன்று
50 ஆவேளை மூன்று உருண்டை பசுவின் நெய்யிலே சுரம் 64 தீரும்.

நாளகம், ரசம், கருநாபிக் கிழங்கு காந்தம், கருகுரோசனை, இவைகளை நீர் நிரையாய் எலுமிச்சம்பழ சாற்றில் அரைத்து உளுந்து பிரமாணம் உருண்டை செய்து கற்றாழை மடல் சாற்றிலாவது, முலைப்பாலிலாவது ஒரு உருண்டை கொடுக்க நாலு நாசிகையால் சுரம் நிற்கும்.

மூளை சுரத்துக்கு குளம்

இரண்டு காஞ்சு சீந்தில் பூவை எலுமிச்சம்பழ சாற்றில் மைபோல் அரைத்து மண்டைப்பு பாஞ்சத்தில் அப்பி வைத்து விளக்கில் நல்லெண்ணெய் விட்டு தீப மேற்றி மை பற்ற வைத்து அதை வெண்கல வட்டிலிலிட்டுக் கொஞ்சம் நல்லெண்ணெய் விட்டு இரும்புக் குழாயால் கலம்பாக்கி சிமிழிலிட்டு பணவிடை கண்ணிற் தீற்ற தீரும்.

44

சன்னி-13-ல் அசாத்திய சன்னிகள்

நா.அ

அந்தகன், சீதாங்கம், கண்டகுப்ஜம், புக்ன நேத்திரம், அபன்யாசம். உருத்திர தாஹம், ரக்திஷ்டீவி இவைகள் 7ம் சாத்தியம் மற்ற அசாத்தியம் அந்தக சன்னி 10-ல் கொல்லும் சீதாங்க சன்னி 15ல் மரணம், கண்டகுப்ஜ சன்னி 13ல் மரணம், புக்ன நேத்திர சன்னி 8-ல் மரணம், அபன்யாச சன்னி 15ல் மரணம், உருத்திர தாஹ சன்னி 10 கொல்லும் ரக்திஷ்டீவி சன்னி 10-ல் கொல்லும் தாந்திரிகம் 25ல் தீரும். சித்தவிப்ரமம் 21ல் தீரும் ஜிஹ்வக சன்னி 12 நாளைல் தீரும். தாந்திரிகம் 7-ல் தீரும்.

ஆ பிரலாப சன்னி 14-ல் தீரும். கர்ணயாச் சன்னி 90 நாளில் தீரும்.

சுக சன்னியின் குணம்.

